**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.S.T.C.No. 33/2025**

**Deposition of Witness for Complainant PW1**

**திரு. மனோஜ் த/பெ. பெள்ளிராஜ் வயது. 49, மேல் அணையட்டி**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**19.11.2025 Witness Signature :**

**PW1 குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி 11.31 A.M**

1. ரூ. 20,000/– ற்கு மேல் ஒருவருக்கு பணத்தை கடனாக கொடுக்க வேண்டுமென்றால், வங்கிக் கணக்கின் மூலம் கொடுக்க வேண்டுமென்பது தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனக்கு மாதம் தோரயமாக எவ்வளவு வருமானம் வரும் என்றால் மாதம் சுமார் ரூ. 1,50,000/– வரும், வருடத்திற்கு சுமார் ரூ. 18,00,000/– வரும். கடந்த 2024 ல் பட்ஜெட்டின் படி ரூ. 5,00,000/– ற்கு மேல் வருமானம் வந்தால், வருமான வரி கட்டவேண்டுமென்று சொன்னால் சரிதான். மேற்படி வருமானத்திற்கு நான் வருமான வரி செலுத்தவில்லை என்று சொன்னால் என் மனைவி செலுத்தி வருகிறார். விவசாய வருமானத்திற்கு வரி செலுத்தவில்லை. என் மனைவியின் வருமான வரி கணக்கில், எதிரிக்கு கொடுத்த பணத்தை காட்டியுள்ளோமா என்றால் காட்டவில்லை. எதிரிக்கு நான் பணம் கொடுத்தபோது நானும் எதிரியும் தான் இருந்தோம். என் புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எதிரிக்கு பணத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால்

சரிதான்.

2. எதிரியின் கணவருக்கு சொந்தமாக வீடும் காரும் உள்ளது என்றும் அவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியும். எதிரிக்கு போதிய வருமானம் இருப்பதால் என்னிடம் பணம் வாங்க வேண்டிய தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது நகராட்சியில் 17வது வார்டு உறுப்பினர் செல்வராணி ஆவார். அவரது கணவர் பெயர் சண்முகம். அவர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் இருக்கலாம். எனக்கும் இந்த வழக்கு காசோலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், எதிரியும் அவரது கணவரும் மேற்படி சண்முகத்திடம் கொடுக்கல் வாங்கலுக்காக கொடுத்த காசோலைதான் இந்த வழக்கு காசோலை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சண்முகத்தை இந்த வழக்கில் எதிரி தரப்பு சாட்சியாக அழைத்து விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை. எதிரி என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. எதிரிக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்ற விபரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு காசோலை ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலையில் கையெழுத்து செய்துள்ள பேனா மையிற்கும், எழுதப்பட்டுள்ள மையிற்கும் வேறுபாடு உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரிய வரவில்லை.

4. எதிரி எனக்கு  சட்டப்படியாக கொடுக்கவேண்டிய கடனுக்காக எனக்கு காசோலைக் கொடுக்கவில்லை என்றாலும், அவர் ஒருபோதும் என்னிடம் காசோலை பணத்தை பெறவில்லை என்றாலும் என்னுடன் சக நகராட்சி வார்டு கவுன்சிலராக உள்ள செல்வராணி மற்றும் அவரது கணவர் சண்முகம் வழக்கு காசோலையை பெற்று அவரது பினாமியாக இவ்வழக்கை எதிரி மீது தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 19.11.2025**
**Judicial Magistrate,**
**Kotagiri**